**BY EMAIL** 01.09.2021

அனுப்புதல்:

அ.வசந்த குமார்,
**(SG.Asst.Evaluation and Research Officer, DDSEDS/DRDA (Rtd),**
438 **B**, சீரடி சாய் **R.K.** இல்லம்,
சீரடி சாய் நகர்,பென்னாகரம் மெயின் ரோடு,
குமாரசாமிபேட்டை,தருமபுரி - 636 701.
**MOBILE: 94438 46074**

பெறுதல் :

# மாண்புமிகு. தமிழக முதலமைச்சர் அவர்கள்,

தமிழ்நாடு அரசு,தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009

உயர்திரு. டாக்டர். இறையன்பு, I.A.S., அவர்கள்,
தலைமை செயலாளர் அவர்கள்,
தமிழ்நாடு அரசு,தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009

உயர்திரு. திரு.உதயச்சந்திரன், I.A.S., அவர்கள்,
மாண்புமிகு. தமிழக முதலமைச்சர் அவர்களின் முதன்மைச்செயலாளர் அவர்கள்,
தமிழ்நாடு அரசு,தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009

முதன்மை செயலாளர் அவர்கள்,
ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பஞ்சாயத்து ராஜ்,
தமிழ்நாடு அரசு,
சென்னை.

இயக்குனர் அவர்கள்,
ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பஞ்சாயத்து ராஜ்,
பனகல் கட்டிடம்,
சென்னை

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர் அவர்கள்,
தருமபுரி மாவட்ட சமூகப் பொருளாதார மேம்பாட்டுச் சங்கம்
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்.
தருமபுரி - 636 705.

திட்ட இயக்குனர் உறுப்பினர் செயலர் அவர்கள்,
தருமபுரி மாவட்ட சமூகப் பொருளாதார மேம்பாட்டுச்சங்கம்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
தருமபுரி - 636 705.

ஐயா / அம்மா,

பொருள் :- பாரபட்சமான நிர்வாக நடவடிக்கைகள் - சிதிலமடைந்த வாழ்வியல் - இழப்பீடு தொகை - ஓய்வூதியம் வழங்க கோருதல் - சம்மந்தமாக

பார்வை : - எனது விண்ணப்பம் நாள் 05.08.2020 ,20.10.2020, 19.05.2021 மற்றும் நினைவூட்டல்கள் - இ மெயில்கள்

------

**தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை என்றால் ஜெகத்தினை அழித்திடுவோம் என்றார் மகாகவி பாரதி.**

**சம்பள நிலுவைத்தொகை/ சம்பளம் கேட்டமைக்காக திட்டம் மூடப்பட்டுவிட்டது என்று விடுவிக்கப்பட்டேன். நானும் எனது குடும்பமும் பட்டினிக்கு தள்ளப்பட்டோம். இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணான நடவடிக்கை.**

**சம்பள நிலுவைத்தொகை/ சம்பளம் கேட்டமைக்காக பணியிலிருந்து விடுவிக்கும் இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணான நடிவடிக்கையை அதுவும் ஒரு i.a.s. அதிகாரி உண்மைநிலை எதையும் ஆய்வுக்கு உட்படுத்தாமல் எடுத்து விடுவிக்கிறார் என்றால் இது அந்த i.a.s. அதிகாரியின் பிற்போக்கான நிர்வாகத்தை, மனிதாபிமானமற்ற தன்மையை நிரூபிக்கிறது.**

**இந்த பிற்போக்கான செயலற்ற நிலைக்கு எனது பணி பலி கடா ஆனது. எனது வாழ்வதாரம் இதனால் இன்று வரை கேள்விக்குறியாகவே இருக்கிறது. சம்பளம் கேட்டதற்காக பணியிலிருந்து வெளியேற்றப்படுவது சட்டபடி சரியானதுதானா?**

**சம்பளம் கேட்டதற்காக நான் பணியிலிருந்து வெளியேற்றப்பட்டேன் என்று நான் பதிவு செய்திருப்பதின் உண்மைத்தன்மையை உரிய கோப்புகளை ஆய்வு செய்து, உறுதிபடுத்த வேண்டும்.**

**எனது வாழ்வாதாரம் இதனால் சிதைக்கப்பட்டு இருக்கிறது. இன்று வரை அதன் பாதிப்பை அனுபவித்து வருகிறேன். எனக்கு வயது 61. உடல்நலக்குறைவும், மன உளைச்சலும் எனது உடலை உருக்கி வருகின்றன.**

குறள் எண் : 948

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

குறள் விளக்கம்:

**மு.வ** :நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணம் ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, உடலுக்கு பொருந்தும் படியாகச் செய்யவேண்டும்.

**சாலமன் பாப்பையா** :நோயாளியின் உடல்மாற்றங்களால் வந்துள்ள நோயை இன்னது என்று அறிந்து அந்த நோய் வருவதற்கான மூல காரணத்தையும் அதைத் தீர்க்கும் வழியையும் அறிந்து அதைப் போக்குவதில் தவறு வந்துவிடாமல் மருத்துவர் செயல்பட வேண்டும்.

**எனது விண்ணப்பங்கள் 5க்கும் மேற்பட்ட ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் அலுவலகத்தை வருட கணக்கில் தட்டிக்கொண்டிருக்கிறது.** நோயின் காரணம் ஆராய்ந்து அதைப் போக்குவதில் தவறு வந்துவிடாமல் மருத்துவர் செயல்பட வேண்டும் என்ற குறளுக்கு ஏற்ப பிரச்சனையின் மூலம் அறிந்து அதைப் போக்குவதில் தவறு வந்துவிடாமல் **ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளின் மூலம் எனக்கு நீதி வழங்கவேண்டும். விரைந்து வழங்க வேண்டும். மாண்புமிகு. முதலமைச்சர்.திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நேர்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளைத்தான் முக்கிய துறைகளுக்கு தேர்வு செய்திருக்கிறார்கள். (உதாரணம் : உயர்திரு. டாக்டர். இறையன்பு, I.A.S., அவர்கள், உயர்திரு. உதயச்சந்திரன், I.A.S., அவர்கள், உயர்திரு. டாக்டர். கோபால், I.A.S. அவர்கள்)**

**கடந்த கால ஆட்சியில் இருந்த அதிகாரிகளால் எனது வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டு இருக்கிறது. இன்று வரை அதன் பாதிப்பை அனுபவித்து வருகிறேன். உண்மைத்தன்மைக்கு அனைத்து விவரங்களையும் சம்மந்தப்பட்ட கோப்புகளில் ஆய்வு செய்து மாண்புமிகு. முதலமைச்சர் அவர்களுக்கு விளக்கம் அளித்து, இழப்பீடு எனக்கு வழங்க வேண்டிய அவசியத்தை தெரிவித்தால் அவர் ஏற்றுக்கொள்ள கூடியவர்தான்.**


**எனக்கு அளிக்கப்படும் நீதியும் நிவாரணமும் சிறப்பாக ஆட்சி நடத்திட தேர்வு செய்திட்ட ஐ.ஏ.எஸ் அதிகாரிகளின் உண்மைத்தன்மைக்கும், நம்பகத்தன்மைக்கும் சாட்சியாகும். வரலாற்றிலும் இடம் பெறும். இதற்கான தனி விழாவினை நானும் எனது குடும்பத்தாரும், நண்பர்களும் நடத்தி மாண்புமிகு. தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்**

அவர்களின் ஆட்சி கட்டமைப்பிற்கு நன்றி அறிவிப்போம். இணையதளத்தில் வெளியிடுவோம். பத்திரிக்கைகள், ஊடகங்கள் மாண்புமிகு. முதலமைச்சர். திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சிக்கான நற்சான்றாக இதனை மக்களிடம் கொண்டு சேர்க்கும்.

எனக்கு வயது 61. உடல்நலக்குறைவும், 2003 முதல் இன்று வரையிலான மன உளைச்சலும் எனது உடலை உருக்கி வருகின்றன.

**Destroyed the life and reputation** என்று குறிப்பிட போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. நிர்வாக நீதிபதிகளாகிய ஐ.ஏ.எஸ் அதிகாரிகளே எனது பிரச்சனைகளுக்கு நியாயமான வகையில் சட்டத்திற்கு உட்பட்ட தீர்வுகளை, தீர்ப்பாக தர இயலும் என்று நம்புகிறேன்.

**6.04.2021** தேதியிட்ட **THE HINDU**



# SC to take up report on ISRO frame-up

## Act against erring officials, urges Centre

LEGAL CORRESPONDENT
NEW DELHI

The Centre has put its weight behind a report filed by a three-member committee chaired by former Supreme Court judge, Justice D.K. Jain, tasked to unravel rogue officials responsible for the infamous Indian Space Research Organisation (ISRO) "frame-up" case of 1994 that destroyed the life and reputation of Nambi Narayanan, one of the country's prominent space scientists.

The Centre has applied to the top court, urging it to accept on record the inquiry report submitted by the Justice Jain Committee and take suitable action on the suggestions made against the "erring officials". The court may take up the case next week.

Mr. Narayanan, in his petition before the Supreme Court, had arraigned former Kerala ADGP Siby Mathews and former senior police officials K.K. Joshwa and S. Vijayan. At the time of his arrest on November 30, 1994, Mr. Narayanan was working on cryogenic engine technology at ISRO. Police had accused him of passing on to Pakistan documents and drawings relating to Viking/Vikas engine technology, cryogenic engine technology and PSLV flight data/drawings.

The Supreme Court had dismissed the case in 2018.

Nambi Narayanan

**“. . . Justice D.K. Jain, tasked to unravel <u>rogue officials</u> responsible for . . . “frame-up case of 1994 that <u>destroyed the life and reputation</u> of Nambi Narayanan, one of the country’s prominent space scientists.**

**. . . <u>suitable action</u> on the suggestions made against the <u>erring officials...”</u>**


**என்பதாக செய்தி வெளியிடப்பட்டு இருக்கிறது. எனது நிலையையும் destroyed the life and reputation என்று குறிப்பிட போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. இதற்கான விவரங்களை 05.08.2020 மற்றும் 20.10.2020, 19.05.2021 தேதியில் அரசுக்கு அனுப்பிய விண்ணப்பங்களில் குறிப்பிட்டு இருக்கிறேன்.**

**எனது விண்ணப்பங்களில் அளித்துள்ள விவரங்களின் உண்மைத் தன்மைகளை கண்டறிந்து , தங்கள் நடவடிக்கைகள் நல்ல தீர்ப்பையும், உரிய நிவாரணத்தையும் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையில் இன்றும் இந்த மனுவை பணிவுடனும், நம்பிக்கையுடனும் சமர்ப்பிக்கிறேன்.**

**இடம் : தருமபுரி**

**நாள் : 01.09.2021**

**தங்கள்உண்மையுள்ள,**



பி.கு: தற்போதைய எனது முதுமை வயது (61), உடல்நலக்குறைவு, பொருளாதார நிலை காரணமாக தபால் அலுவலகம் சென்று பதிவுத்தபால் அனுப்புவதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளதால் இமெயில் வழியாக தொடர் விண்ணப்பங்கள் சமர்ப்பித்து வருகிறேன்.